## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.108/2021.
Prosecution witness for P.W.11 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. மாணிக்கம்.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.02.2026.

Accused absent. 317 Crpc petition filed.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது காளாம்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு குமரெட்டியாபுரம் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது காளாம்பட்டி கிராம நிர்வாக அலுவலராக கூடுதல் பொறுப்பில் இருந்தபோது 15.11.2020 அன்று காலை நான் வீட்டில் இருந்தபோது 8.30 மணியளவில் போலீசார் கைபேசி மூலம் அழைத்ததால் நானும் அந்த கிராமத்தைச் சார்ந்த கார்த்திக் என்பவரும் காலாங்கரைபட்டி பேருந்து நிறுத்தம் அருகில் சென்றபோது எதிரிகளை போலீசார் எங்கள் முன்பாக கைது செய்து விசாரித்தபோது 1ம் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் எங்கள் முன்பாக பதிவு செய்து எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். அதன் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ 6**. அதன் அடிப்படையில் 1ம் எதிரி எங்களை உப்பாற்று ஓடை அருகில் அழைத்துச் சென்று ஓடையில் மறைத்து வைத்திருந்த ஒரு கத்தி, ரத்தக்கறை படிந்த சட்டை ஆகியவற்றை ஆஜர் செய்ததை போலீசார் எங்கள் முன்னிலையில் கைப்பற்றி எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். அந்த கைப்பற்றுதல்

மகஜர் **அ.சா.ஆ 7**. அந்த கத்தி **சா.பொ.1.** மேற்படி சட்டை **சா.பொ.2**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

இந்த வழக்கு சம்பவம் பற்றி உடனடியாக எனக்கு தெரிவிக்கப்பட்டது என்றால் மறுநாள் காலையில்தான் தெரிய வந்தது. நான் உடனடியாக அந்த கிராமத்திற்கு சென்று விசாரித்தேன். நான் 2010 லிருந்து கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்து வருகிறேன். பொதுவாக இதுபோன்ற பணிகளுக்காக செல்லும்போது நான் தனியறிக்கை தயாரிக்க வேண்டுமென்றால் சரிதான். இந்த வழக்கில் தனியறிக்கை தயார் செய்ததாக ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லவில்லை. தனியறிக்கையில் நான் யார் யாரை விசாரித்தேன் என்றும், என்ன விபரங்களை தெரிந்து கொண்டேன் என்றும் ஆய்வாளரிடம் உடனடியாக தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு பணிகளில் நான் அழைப்பு சாட்சி என்றால் சரிதான். எதிரிகளை போலீசார் எங்கு வைத்து கைது செய்தார்கள் என்பதை நான் நேரில் பார்க்கவில்லை. மேற்படி கார்த்திக் தனி நபர். அரசு ஊழியர் அல்ல. ஒவ்வொரு கிராமத்திற்கு ஒரு கிராம உதவியாளர் இருப்பார் என்றால் சரிதான். ஆனால் காளாம்பட்டி கிராமத்திற்கு கிராம உதவியாளர் அப்போது இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக என் பணியை என் உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்தேன். ஒவ்வொரு நாளும் நான் என்ன என்ன பணி செய்தேன் என்பதை பதிவேட்டில் குறிப்பிட்டு பராமரிக்க வேண்டுமென்றால் சரிதான். இந்த வழக்கைப் பொறுத்தவரையில் நான் பதிவேட்டில் குறிப்பிடவில்லை. அ.சா.ஆ 6 ல் உள்ள கையொப்பத்தை நான் காவல்நிலையத்தில் வைத்து போட்டேன் என்றால் சரிதான். முதல் விசாரணை சங்கதிகள் உண்மையானவை அல்ல என்றால் சரியல்ல நான் சொன்ன நேரத்திலும்,

சொன்ன விதத்திலும் 1ம் எதிரி கைது செய்யப்படவில்லை என்றும், அவர் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும், போலீசாரும் எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றும், நான் அரசு ஊழியர் என்பதால் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க நிலையத்திலேயே கையொப்பமிட்டுவிட்டு தற்போது பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் மேற்படி உப்பாற்று ஓடைக்கு எந்த வாகனத்தில் சென்றேன் என்பதை ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை. இந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜருக்காக நான் பிரத்யோகமாக உருவாக்கப்பட்ட சாட்சி என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.24 17:48:08 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.108/2021.

Prosecution witness for P.W.12 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. ரமேஷ்.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.02.2026.

Accused absent. 317 Crpc petition filed.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்து வருகிறேன். நான் கடந்த 15.11.2020 அன்று காலை 10.30 மணியளவில் மேற்படி மருத்துவமனையில் முழுநேர பணியில் இருந்தபோது இறந்துபோன செல்லப்பாண்டி என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக ஆய்வாளரின் வேண்டுகோள் கடிதத்துடன் முதல்நிலை காவலர் திரு. ரவிசங்கள் மூலம் பெற்றுக் கொண்டேன். பிரேதத்தை மேற்படி காவலர் அடையாளம் காட்டினார். அன்று காலை 10.40 மணியளவில் நான் பிரேத பரிசோதனையை ஆரம்பித்தேன்.

வெளிப்புற காயங்கள்

1. இடது நெஞ்சுப் பகுதியில் ஒரு குத்துக்காயம் 2x1cm x நுரையீரல் ஆழம் வரையில் இருந்தது.

2. வயிற்றுப் பகுதியில் ஒரு குத்துக்காயம் 3x1cmx வயிற்றின் உட்பகுதி ஆழம் வரையில் இருந்தது.

3. இடது நுரையீரல், இடது தொடைப் பகுதி, தோள்பட்டையின் இருபுறம், இரண்டு கால் பகுதி, வலது முன்கை, இடது கன்னம் ஆகிய பகுதிகளில்

பல்வேறு அளவிலான சிதைந்த காயங்கள் காணப்பட்டது. மேற்படி காயத்தினால் ஏற்பட்ட அதிகமான ரத்த போக்கினாலும், அதிக வலியினால் ஏற்பட்ட அதிர்ச்சியினாலும் மேற்படி நபர் என் பிரேத பரிசோதனைக்கு முன்பாக 10 முதல் 14 மணி நேரத்திற்குள் இறந்திருக்கக்கூடும் என்று கருத்து தெரிவித்து நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ 8**. திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற உடல் உள்ளுறுப்புகளின் ரசாயன பரிசோதனையின்படி நான் வழங்கிய இறுதி கருத்துரை **அ.சா.ஆ 9**. மேற்படி காயங்கள் சா.பொ.1 ஆயுதத்தால் ஏற்பட வாய்ப்புண்டு. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

ஆய்வாளர் என்னை ஆயுதத்தை காட்டி விசாரிக்கவில்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.24 17:48:15 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.